

தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர்,கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர். ஆ.மணி தலைமையில் பென்னாகரம் சட்டமன்ற தொகுதியில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமைக் கழகப் பேச்சாளர்கள் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், இளம் பேச்சாளர் யோகேஸ்வரி, சிறப்புரை ஆற்றினர். உடன் முன்னாள் மாவட்ட செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,முன்னாள் மாவட்ட பொறுப்பாளர்கள் பி.என்.பி.இன்பசேகரன், பி.தருமச்செல்வன், நகர செயலாளர் நாட்டான்.மாது, மாநில நிர்வாகி ஆர்.பி.செந்தில்குமார், அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகாதேவி, ஆறுமுகம், உமாசங்கர், கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,துணை அமைப்பாளர்கள் கே.ஆர்.சி.செல்வராஜ்,கார்த்தி,வழக்கறிஞர்.அசோக்குமார், பி.ராஜகோபால்,என்.எஸ்.கலைச்செல்வன்,முத்தமிழ்,மற்றும் முன்னாள்,இந்நாள் ஒன்றிய செயலாளர்கள்அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதி, தாளியூர் பேரூர் கழகத்தின் சார்பில் பேரூர் கழக செயலாளர், தலைவர் தண்டபாணி ஏற்பாட்டில் குளத்துப்பாளையம், சந்தைப்பேட்டை வீதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். இதில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி, தலைமைக் கழகப் பேச்சாளர் எழும்பூர் கோபிநாத் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம் பெரிய நெகமம் நகரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா – சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் கே.வி.கே.எஸ். சபரி கார்த்திகேயன் தலைமையில் ராசு (எ) முத்துக்குமார் வரவேற்புரையில் ஆர்த்தி சபரி கார்த்திகேயன், கலைமணி தண்டபாணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன், கே.ஈஸ்வர சாமி எம்.பி., நாஞ்சில் சம்பத் உள்ளிட்டோர் பேசினார். உடன் ஆர்.மகேந்திரன், தென்றல் செல்வராஜ், ஜி.ஏ.அதிபதி, கே.எம்.நாகராஜ், பனப்பட்டி தினகரன், மு.க.முத்து, மயூரா சுப்பிரமணியம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### மகாராஷ்டிரத்தில் மராட்டியைத் தவிர வேறு எந்த – மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல என்னும்

# முதலமைச்சர் பட்னாவிஸின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறதா?

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் கேள்வி!

சென்னை, ஏப்.23-

தேசிய கல்விக் கொள்கையின் கீழ், மகாராஷ்டிரத்தில் மராட்டியம் தவிர வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல எனும் அம்மாநில முதலமைச்சர் பட்னாவிஸ் அவர்களின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா என்று சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மகாராஷ்டிரத்தில் இந்தியைக் கட்டாய மூன்றாவது மொழியாகத் திணித்ததற்காகக் கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், மகாராஷ்டிர மாநிலத்தில் மராட்டி மட்டுமே கட்டாய மொழி எனக் கூறுகிறார் அம்மாநில முதலமைச்சர் தேவேந்திர பட்னாவிஸ் அவர்கள். இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிப்பதற்கு எதிராக, மிகப் பரவலாக மக்கள் தமது கண்டனங்களைத் தெரிவித்ததன் விளைவாக உருவான நடுக்கத்தின் வெளிப்பாடு தான் அவரது இந்தப் பேட்டி.**

**இந்நிலையில், பிரதமர் அவர்களும் ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்களும் பின்வருவன வற்றைத் தெளிவுபடுத்திட வேண்டும்:**

**தேசிய கல்விக் கொள்கையின்கீழ், மகாராஷ்டிரத்தில் மராட்டியைத் தவிர வேறு எந்த மூன்றாவது மொழியும் கட்டாயமல்ல எனும் பட்னாவிஸ் அவர்களின் நிலைப்பாட்டை ஒன்றிய அரசு அதிகாரப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறதா?**

**எனில், தேசிய கல்விக் கொள்கையின்படி, மூன்றாவது மொழியைப் பயிற்றுவிப்பது கட்டாயமல்ல என்று தெளிவான வழிகாட்டுதலை ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுக்கும் வழங்குமா?**

**மும்மொழிக் கொள்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக அநியாயமாக தமிழ்நாட்டுக்குத் தராமல் நிறுத்தி வைத்திருக்கும் 2,152 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்குமா?**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை

# 12 ஆலைகளில் இணைமின் திட்டம் செயல்பட்டு வருகிறது!

## சட்டப்பேரவையில் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!



சென்னை, ஏப். 23-

**சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின் போது அ.தி.மு.க. உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி பேசும்போது இணைமின் திட்டம் நிறைவேற்றப் படவில்லை என்று கூறினார்.**

இதற்கு பதிலளித்து அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேசியதாவது:-

உறுப்பினர் ஆ.கோவிந்தசாமி பேசும்போது, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் 10 கோரிக்கைகளை வைத்ததாகத் தெரிவித்திருக்கிறார். அதில், இணை மின் திட்டம் நிறைவேறவில்லை; அந்தப் பணி முழுமையாக நிறைவேறவில்லை என்று சொல்லியிருக்கிறார். இணை மின் திட்டத்தைப் பொறுத்தவரை, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில், 12 ஆலைகளில் இணை மின் திட்டம் செயல்பட்டு வருகிறது. அவற்றில் 7 ஆலைகள், செங்கல்ராயன் ஆலை, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செய்யாறு கூட்டுறவு சர்க்கரை ஆலை, அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, பெரம்பலூர் சர்க்கரை ஆலை, தருமபுரி ஆலை மற்றும் எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய 7 ஆலைகளில் இணை மின் திட்டப் பணி முழுமையாக முடிக்கப்பட்டிருக்கிறது. அவர் குறிப்பிட்ட சுப்பிரமணிய சிவா ஆலையிலும் 45 சதவிகிதப் பணிகள் நிறைவுற்றிருக்கின்றன. ஆனால், ஒன்றுமே நடைபெறவில்லை என்ற ஒரு தவறான தகவலை அவைக்குத் தந்திருக்கிறார்.

எனவே, இந்தத் தகவலை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள்.

இன்னும் 5 ஆலைகளிலே முடிய வேண்டியிருக்கிறது. அது சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, கள்ளக்குறிச்சி1, கள்ளக்குறிச்சி2, சுப்பிரமணிய சிவா தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை போன்ற ஆலைகளில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக இணை மின் திட்ட பணிகள் நிறைவுபெற இருக்கிறது என்பதைத் தகவலுக்காகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா.இராஜேந்திரன் பதிலளித்து பேசினார்.

### கல்லணை முதல் அணைக்கரை வரையில் தடுப்பணையே இல்லை;

# திருப்புறம்பியம் - குடிதாங்கி ஊராட்சியில் தடுப்பணை கட்டிட வேண்டும்!

## சட்டப்பேரவையில் கும்பகோணம் க. அன்பழகன் கோரிக்கை!



சென்னை, ஏப். 23-

**கல்லணை முதல் அணைக்கரை வரையில் தடுப்பணையே இல்லை, எனவே திருப்புறம்பியம் - குடிதாங்கி ஊராட்சியில் தடுப்பணை வேண்டும் என்று சட்டப்பேரவையில் கும்பகோணம் க.அன்பழகன் கோரிக்கை விடுத்தார்.**

இது பற்றிய விவாதம் வருமாறு:

**க.அன்பழகன்:** கொள்ளிடம் ஆற்றில் கல்லணை முதல் அணைக்கரை கீழணை வரை சுமார் 100 கி.மீ. அளவில் ஒரு தடுப்பணைகூட இதுவரை கட்டப்படவில்லை. இருபதுக்கும் மேற்பட்ட குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன; 40 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் விவசாய நிலங்களில் விவசாயமும் செய்து கொண்டிருக்கிறார்கள். நிலத்தடி நீராதாரத்தையும், குடிநீர் ஆதாரத்தையும் பெருக்கி, ஆண்டு முழுவதும் விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு மூன்று தடுப்பணைகள் கட்ட வேண்டும். இல்லையெனில், திருப்புறம்பியம், குடிதாங்கி ஊராட்சியில் ஒரு தடுப்பணையாவது கட்டித் தர வேண்டும் என்று நானும், நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், ஜெயக்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் அவர்களும், பெரம்பலூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ம. பிரபாகரன் அவர்களும் இணைந்து கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்கள், இக்கோரிக்கையை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் துரைமுருகன்:** இவரே கேள்வி கேட்டால் போதும்! அதற்கு recommendation வேறு கொண்டு வருகிறார்! உறுப்பினர் பெரி. செந்தில்நாதன் அவர்கள், பெரியார் பாசனம் குறித்து மூலக் கேள்வி கேட்டுள்ளார்கள். ஆனால், உறுப்பினர் க. அன்பழகன் அவர்கள், காவிரிப் பாசனம் குறித்து துணைக் கேள்வி கேட்கிறார். இதற்கும், அதற்கும் வெகு தூரம். ஒன்றை இந்த மன்றத்தில் தெரிவித்து விடுகிறேன். ஓர் உறுப்பினர் கேள்வி கேட்டால், அதற்குப் பதில் எப்படி தயார் செய்ய வேண்டுமென்றால், உதாரணமாக, தற்போது மூலக் கேள்வி கேட்ட உறுப்பினர் செந்தில்நாதன் அவர்கள், வேறு என்னென்ன கேள்விகள் கேட்டிருக்கிறார் என்பதையெல்லாம் collect செய்து, அதற்குரிய பதில்களையெல்லாம் தயார் செய்து கொண்டு வருவோம். அப்போதுதான் அதை மிஞ்சிப் போக முடியாது; அவர், மிஞ்சி மிஞ்சிப் போனால் அதற்குள்ளாகத் தான் கேள்விகள் கேட்க வேண்டும். அவர் பத்து கேள்விகள் கேட்டிருப்பார்; அதற்குப் பதில் சொல்ல வேண்டும். அதுவரையிலும் தான் நாங்கள் prepare செய்து கொண்டு வருவோம். ஆகவே, காவிரி பாசனம் குறித்து இந்தப் பக்கம் cater செய்யக் கூடாது. ஆகையினால், இவ்வளவு அக்கறை கொண்டவர் ஒரு தனிக் கேள்வி போட்டிருக்க வேண்டும். நான் முன்பு சட்டமன்ற உறுப்பினராக இருந்தகாலத்தில், இதுபோன்று out of the question கேட்டால், usual ஆக, இதற்கு தனிக் கேள்வி போடவும் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விடுவார்கள். அதுவும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சாதிக்பாட்ஷா அவர்கள், இதுபோன்று பதிலளித்து விட்டு, உடனே உட்கார்ந்து விடுவார். ஆகையால், உறுப்பினர் அன்பழகன் அவர்கள் இவ்வளவு கேட்டதால், எப்படியும் ஒரு தடுப்பணையாவது கட்டித் தருகிறேன். ஆனால், தடுப்பணை கட்டித் தர வேண்டும் என்று கேட்கும்போது, உங்கள் தொகுதிக்கு கேட்டிருக்க வேண்டும்; ஜப்பானில் இருப்பவர்களுக்கெல்லாம் கேட்கக் கூடாது.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.



கோவை மாநகர் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், பகுதிக் கழக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் கழக மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் செ.உமாமகேஸ்வரி தலைமையில், மாநகர் மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் அன்னம்மாள், மாநகர் மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் கனிமொழி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகர் மாவட்டக் கழக செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, சிறப்புரையாற்றினார். இதில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், மாநகர் மாவட்ட மகளிர் தொண்டரணி தலைவர் சாந்தாமணி பன்னீர்செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



கோவை மாநகர் மாவட்டம், சாய்பாபா காலனி பகுதி, 45 வது வட்ட கழக முன்னாள் செயலாளர் வெ. சுப்பிரமணியம் உடல்நலக் குறைவால் காலமானார். தகவல் அறிந்ததும் மாநகர் மாவட்டக் கழக செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் நேரில் சென்று மலரஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், சாய்பாபா காலனி பகுதி செயலாளர் கே.எம்.ரவி, வேலாண்டிபாளையம் பகுதி செயலாளர் எ.எம். கிருஷ்ணராஜ், கணபதி பகுதி செயலாளர் கோவை லோகு, 45 வது வட்டக் கழக செயலாளர் கண்ணன், தகவல் தொழில்நுட்ப அணி வினோத் உள்பட கழக நிர்வாகிகள் பலர் அஞ்சலி செலுத்தினர்.



**தி.மு.க.**

**இளைஞர் அணி**

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–8 க்கு உட்பட்ட இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, தென்காசி வடக்கு மற்றும் தென்காசி தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே விருதுநகர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான அறிமுகக்கூட்டம் நடந்து முடிந்துள்ள நிலையில், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 22-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி